இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 21.03.2026

# அ.தி.மு.க. மீது அமலாக்கத்துறை பாயாதா?

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அமைச்சர்களாக இருந்த ஏழு பேர் மீது லஞ்ச ஒழிப்புத் துறை வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறது. இதனை சட்டவிரோத பணப் பரிமாற்றச் சட்டத்தின் கீழ் அமலாக்கத்துறை வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்த விட வேண்டும் என்று தி.மு.க. சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு உள்ளது. சென்னை உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினர் கிரிராஜன் இது தொடர்பான வழக்கைத் தாக்கல் செய்துள்ளார்.

அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அமைச்சர்களாக இருந்த எஸ்.பி. வேலுமணி, தங்கமணி, சி.விஜயபாஸ்கர், எம்.ஆர். விஜயபாஸ்கர், சி.காமராஜ், கே.சி.வீரமணி, கே.பி.அன்பழகன், எடப்பாடிபழனிச்சாமியின் உறவினர் சேலம் இளங்கோவன், அ.தி.மு.க. முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சத்யா ஆகியோருக்கு எதிராக தனித்தனியாக வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளார் கிரிராஜன் எம்.பி.

முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணி மீது ஏராளமான வழக்குகள் விசாரணையில் இருக்கின்றன. சாலைகள் அமைப்பதில் முறைகேடுகள் நடைபெற்றதாக வழக்கு, வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக வழக்கு, எல்.இ.டி. வாங்கியதில் முறைகேடு நடைபெற்றதாக வழக்கு என லஞ்ச ஒழிப்புத்துறையால் பதிவு செய்யப்பட்டு உள்ளது.

**தங்கமணி, கே.பி.அன்பழகன், எம்.ஆர்.விஜயபாஸ்கர், சி.காமராஜ், சி.விஜயபாஸ்கர், கே.சி.வீரமணி ஆகியோர் வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்ததாக தொடரப்பட்ட வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது. முன்னாள் அ.தி.மு.க. எம்.எல்.ஏ. சத்யா மீது வருமானத்துக்கு அதிகமாக சொத்து சேர்த்த வழக்கு,சேலம் இளங்கோவன் மீது வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்த வழக்கு விசாரணை நிலுவையில் இருக்கிறது.**

“லஞ்ச ஒழிப்புத்துறை முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து விசாரணை முடித்து குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து விட்டால் அந்தக் குற்றம் தொடர்பான வழக்கைத் தொடர முடியும் என்று சட்டவிரோத பணப் பரிமாற்றச் சட்டத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த வழக்குகளில் குற்றம் செய்தவர்கள் பண மோசடி மற்றும் வருமானத்துக்கு அதிகமாகச் சொத்து சேர்த்தது, ஊழல் குற்றத்தில் ஈடுபட்டதால் அவர்கள் மீது அமலாக்கத்துறை வழக்குப் பதிவு செய்வதற்கான முகாந்திரம் உள்ளது” என்று கிரிராஜன் தனது மனுவில் தெரிவித்து உள்ளார்.

“இது தொடர்பாக அமலாக்கத்துறைக்கு பல்வேறு புகார்கள் அனுப்பப்பட்டும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே லஞ்ச ஒழிப்புத்துறை சேகரித்துள்ள ஆவணங்கள் அடிப்படையில் இவர்கள்மீது அமலாக்கத்துறை வழக்குத் தொடர முடியும். ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் இவர்கள் மீது வழக்குகள் உள்ளதால், சட்டவிரோத பணப் பரிமாற்றச் சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்வதற்கான முகாந்திரம் உள்ளது” என்று தெரிவித்து உள்ளார்.

இதனை அடிப்படையாகக் கொண்டு அவர்கள்மீது அமலாக்கத்துறை சட்டவிரோத பணப் பரிமாற்றச் சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்யுமாறு உத்தரவிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார். இந்த வழக்கு விசாரணை விரைவில் வரவுள்ளது.

**அ.தி.மு.க. ஆட்சிக் காலம், ஊழல் நாற்றம் எடுத்த அரசாங்கம் என்பது அனைவருக்கும் தெரியும். அதனால்தான் தொடர்ச்சியாக அந்தக் கட்சியை தமிழ்நாட்டு மக்கள் தோற்கடித்தே வந்துள்ளார்கள்.**

தமிழ்நாடு ஆளுநரைச் சந்தித்து அ.தி.மு.க. அமைச்சர்கள் மீதான ஊழல் பட்டியலை அப்போதே தி.மு.க. வழங்கியது. அப்போதைய முதலமைச்சர் பழனிசாமி, அமைச்சர்கள் வேலுமணி, தங்கமணி, விஜயபாஸ்கர், உதயகுமார், காமராஜ், ஜெயக்குமார் ஆகியோர் மீது ஊழல் புகார்கள் அதில் இடம்பெற்றிருந்தன.

பழனிசாமி முதலமைச்சராக இருந்தபோதே அவர்மீது டெண்டர் வழக்குப் பாய்ந்தது. தமிழ்நாட்டில் நெடுஞ்சாலைப் பணிகளை மேற்கொள்ள ஒதுக்கீடு செய்யப்பட்ட டெண்டர் ஒப்பந்தத்தில் சுமார் 4,800 கோடி ரூபாய் முறைகேடு நடைபெற்றாகவும், இதுகுறித்து பழனிசாமிமீது வழக்குப் பதிவுசெய்து விசாரணை நடத்தக்கோரி சென்னை உயர்நீதி மன்றத்தில் தி.மு.க. அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி 2018ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்தார். இவைகளை தனது உறவினர்களுக்கே டெண்டராகக் கொடுத்துக் கொண்டார் பழனிசாமி என்பதுதான் குற்றச்சாட்டு. வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம் வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றி 2018 அக்டோபர் மாதம் உத்தரவிட்டது.

உடனடியாக எடப்பாடி பழனிசாமி, உச்சநீதிமன்றம் போய் தடை வாங்கினார். “உங்கள்மீது ஊழல்புகார் சொல்லப்படுகிறதே?’ என்று நிருபர்கள் டெல்லியில் வைத்து அவரிடம் கேட்டார்கள். ”யார் மீதுதான் ஊழல் புகார் இல்லை” என்று சொன்னவர்தான் பழனிசாமி.

1. யார் மீதுதான் ஊழல் புகார் இல்லை?
2. எனது உறவினர்கள் தமிழ்நாடு முழுவதும் இருக்கிறார்கள்!
3. எனது உறவினர்கள் ‘இ’ டெண்டர் போட்டது எனக்குத் தெரியாது!

- இவைதான் பழனிசாமி முதலமைச்சராக இருந்த போது சொன்ன பதில்கள் ஆகும்.

குட்கா வியாபாரிகளிடம் அரசாங்கத்தின் பெயரால் மாமூல் வசூல் செய்ததுபழனிசாமிஆட்சிதான்என்பதைமக்கள்இன்னும்மறக்கவில்லை. தங்களது வியாபாரத்துக்குத் துணை நின்றவர்கள் அ.தி.மு.க. ஆட்சியில் யார் யார் என்பதை டைரி எழுதி வைத்திருந்தார்கள் வியாபாரிகள். அந்த நிறுவனத்தில் இருந்து 40 கோடி ரூபாய் வரை லஞ்சம் பெறப்பட்டுள்ளது அ.தி.மு.க. ஆட்சியில். சி.பி.ஐ. இதனை விசாரித்து வருகிறது.

முன்னாள் அமைச்சர்கள் வேலுமணி, கே.பி.அன்பழகன், எம்.ஆர். விஜயபாஸ்கர், வீரமணி, தங்கமணி, புதுக்கோட்டை விஜயபாஸ்கர் ஆகியோர் வீடுகளில் லஞ்ச ஒழிப்புத் துறை ரெய்டு நடத்தியது.

டாக்டர் விஜயபாஸ்கர் மீது வருமானத்துக்கு அதிகமாக 35.79 கோடி ரூபாய் சொத்து சேர்த்ததாகவும், கே.பி.அன்பழகன் மீது வருமானத்துக்கு அதிகமாக 45.20 கோடி ரூபாய் சொத்து சேர்த்ததாகவும், காமராஜ் மீது வருமானத்துக்கு அதிகமாக 58.44 கோடி ரூபாய் சொத்து சேர்த்ததாகவும் வழக்குப் பதிவாகி வெவ்வேறு நீதிமன்றங்களில் நடைபெற்று வருகிறது. இதெல்லாம் அமலாக்கத்துறைக்குத் தெரியாதா?

**பா.ஜ.க.வுடன் கூட்டணி சேர்ந்ததும் ‘வாசிங் மிஷின்’ வைத்து வெளுத்து விட்டார்களா? என்பதுதான் தமிழ்நாட்டு மக்கள் எழுப்பும் கேள்வி ஆகும்.**



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (20.3.2026) காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதையொட்டி, இராணிப்பேட்டை, வேலூர், திருப்பத்தூர், திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களிலிருந்து கழகத்தின் சார்பில் வேட்பாளர்களாகப் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளவர்களிடம் நேர்காணல் நடத்தினார். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர் – அமைச்சர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

### பிரிக்க முடியாத சொந்தமாக – அன்பும் ஈகைப் பண்பும் கொண்ட

# இஸ்லாமியப் பெருமக்களுக்கு என்றும் அரணாக இருப்பது தி.மு.க.!

## தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் ரமலான் வாழ்த்துச் செய்தி !

**சென்னை, மார்ச் 21-**

**கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ரமலான் வாழ்த்துச் செய்தி வருமாறு:-**

நோன்பை முடித்து, புத்தாடை அணிந்து, அன்பை அனைவரோடும் பகிர்ந்து கொள்ளும் இசுலாமிய உடன் பிறப்புகள் அனைவருக்கும் உங்களில் ஒருவனின் இனிய ரமலான் நல்வாழ்த்துகள்.

**சிறுபான்மையினருக்கு சமூக நீதி நிலைநாட்டல்!**

வரலாற்றில் நாம் கண்ட பெரும் புரட்சியாளர்களில் ஒருவரும், சமத்துவத்தின் திருவிளக்குமான நபிகள் நாயகத்தின் நெறியில் வாழ்ந்து வரும் இசுலாமியச் சகோதரர்களுக்கு என்றும் அரணாக நமது திராவிட முன்னேற்றக் கழகமும், கழக அரசும் திகழ்ந்து வருகின்றது. கல்வி, வேலைவாய்ப்புகள், பொருளாதாரம், அரசியல் பிரதிநிதித்துவம், மதச் சுதந்திரம் என அனைத்து நிலைகளிலும் சிறுபான்மைச் சகோதரர்களுக்கான சமூகநீதியை நிலைநாட்டி இருக்கிறது.

இசுலாமிய மக்களுக்கு எதிரான சட்டங்களை ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவரும் போதெல்லாம் மக்கள் மன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் அவற்றை எதிர்த்துக் கடுமையாகப் போராடி வருவதுடன், சட்டமன்றத் தீர்மானங்கள் வாயிலாகவும் நமது நிலைப்பாட்டை உறுதியாக வெளிப்படுத்தி வருகிறோம். மதச்சார்பின்மைக் கொள்கையில் சமரசமற்று நாம் செயல்படுவதால்தான், அனைத்துத் தரப்பு மக்களும் நம்மைத் தொடர்ந்து ஆதரித்து வருகிறார்கள்.

**தமிழ்நாடு நல்லிணக்கத்தின் பூங்கா!**

இந்தியாவில் பிற மாநிலங்களில் எல்லாம் வெறுப்பு விதைகள் தூவப்பட்டு, நாள்தோறும் வன்முறைகள் நிகழ்த்தப்பட்டு வரும் நிலையிலும் தமிழ்நாடு நல்லிணக்கத்தின் பூங்காவாகத் திகழ்கிறது. எல்லாருக்கும் எல்லாம் என்ற வழியில் நடைபோடும் நமது அரசு அனைவரது பாதுகாப்பையும் உரிமைகளையும் உறுதிசெய்துள்ளது.

கடந்த 5 ஆண்டு திராவிட மாடல் ஆட்சியில், பல சிறப்பு அறிவிப்புகளையும், சென்னையில் ஹஜ் இல்லம், தொன்மையான பள்ளிவாசல்கள் - தர்காக்கள் புனரமைப்பு, இசுலாமிய மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகைகள் உள்ளிட்ட திட்டங்களையும் நிறைவேற்றி வந்திருக்கிறோம்.

**ஈகைப் பண்போடு ரமலான் பண்டிகை!**

இப்படி என்றும் உங்களில் இருந்து பிரிக்க முடியாத சொந்தமாக உறவாடும் அன்போடு, ஈகைப் பண்போடு ரமலான் பண்டிகையைக் கொண்டாடும் இசுலாமியப் பெருமக்களுக்கு என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### சட்டமன்றத் தொகுதி – பகுதி வாரியாக

# மின்னணு வாக்குப்பதிவு எந்திரங்கள் சரிபார்க்கும் பணி!

## தலைமைத் தேர்தல் அதிகாரி அறிவிப்பு!





சென்னை, மார்ச் 21-

சட்டமன்றத் தொகுதி - பகுதி வாரியாக வாக்குப்பதிவு எந்திரங்கள், வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளையும் ஒதுக்கீடு செய்வதற்கு, முதல் நிலை பரிசோதனை குறித்து தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக்கின் குறிப்பாணை வருமாறு:-

சட்டமன்றத் தொகுதி / பகுதி வாரியாக மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களையும், வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளையும் ஒதுக்கீடு செய்வதற்கு, முதல் நிலை பரிசோதனை நிறைவடைந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளும் மாவட்டத் தேர்தல் அலுவலரால் முதலாவது சமவாய்ப்பிற்குட்படுத்தபடுகின்றன. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களையும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளையும் முதலாவது சமவாய்ப்பிற்குட்படுத்துதல் குறித்த விரிவான அறிவுறுத்தல்கள் குறித்து மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பற்றிய நடைமுறை நூலில் குறிப்பிடப்பட்டுள்ளன. இது, இந்தியத் தேர்தல் ஆணையத்தின் https://www.eci.gov.in/evmvvpat என்ற வலைதளத்தில்: இடம்பெற்றுள்ளது.

தமிழ்நாட்டிற்கான வரவிருக்கும் பொதுத் தேர்தலில் பயன்படுத்தப்பட வேண்டிய மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் முதலாவது சமவாய்ப்பிற்குட்படுத்துதல் பின்வருமாறு திட்டமிடப்பட்டுள்ளது:

**மாவட்டத்தின் பெயர் முதலாவது சமவாய்ப்பிற்குட்படுத்துதல் நாள்**

திருவள்ளூர் 23.03.2026 - சென்னை 23.03.2026, காஞ்சிபுரம் 23.03.2026, வேலூர் 23.03.2026, கிருஷ்ணகிரி 23.03.2026, தர்மபுரி 20.03.2026, திருவண்ணாமலை 23.03.2026, விழுப்புரம் 23.03.2026, சேலம் 24.03.2026, நாமக்கல் 23.03.2026, ஈரோடு 23.03.2026, நீலகிரி 23.03.2026, கோயம்புத்தூர் 23.03.2026, திண்டுக்கல் 23.03.2026, கரூர் 23.03.2026, திருச்சிராப்பள்ளி 23.03.2026, பெரம்பலூர் 23.03.2026, கடலூர் 23.03.2026, நாகப்பட்டினம் 23.03.2026, திருவாரூர் 23.03.2026, தஞ்சாவூர் 23.03.2026, புதுக்கோட்டை 24.03.2026, சிவகங்கை 23.03.2026, மதுரை 23.03.2026, தேனி 25.03.2026, விருதுநகர் 24.03.2026, இராமநாதபுரம் 23.03.2026, தூத்துக்குடி 23.03. 2026, திருநெல்வேலி 23.03.2026, கன்னியாகுமரி 23.03.2026, அரியலூர் 20.03.2026, திருப்பூர் 23.03.2026, கள்ளக்குறிச்சி 23.03.2026, தென்காசி 23.03.2026, செங்கல்பட்டு 23.03.2026, திருப்பத்தூர் 23.03.2026, இராணிப்பேட்டை 23.03.2026, மயிலாடுத்துறை 23.03.2026,

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் முதலாவது சமவாய்ப்பிற்குட்படுத்துதல் அங்கீகரிக்கப்பட்ட தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திர மேலாண்மை முறை (EMS) வாயிலாக சம்பந்தப்பட்ட மாவட்டத் தேர்தல் அலுவலரால் மேற்கொள்ளப்படும்.

முதலாவது சமவாய்ப்பிற்குட்படுத்துதல் நிறைவடைந்த பின்னர், தொகுதி வாரியாக ஒதுக்கீடு செய்யப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் பட்டியல்கள் மாவட்ட தலைமையிடங்களிலுள்ள அங்கீகரிக்கப்பட்ட அனைத்து தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளுடன் பகிரப்படும். இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தாம் அளித்த வாக்கினை சரிபார்க்கும் கருவிகள், தேர்தலில் பயன்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு/உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு வழங்கப்படும். இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளும், அங்கீகாரம் பெற்ற தேசிய மற்றும் மாநில அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளின் முன்னிலையில் அந்தந்த சட்டமன்ற காப்பறையில் பாதுகாப்பாக வைக்கப்படும்.

தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை இறுதி செய்த பின்னர், முதலாவது சமவாய்ப்பிற்குட்படுத்தப்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்காளர் தான் செலுத்திய வாக்கினை சரிபார்க்கும் கருவிகளின் பட்டியல் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களுடனும் பகிரப்படும்.

2. தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 தொடர்பாக பாதுகாப்பு படைகளின் பணியமர்த்தல் தொடங்கப்பட்டுள்ளது. மத்திய உள்துறை அமைச்சகம் ஏற்கனவே மத்திய ஆயுத பாதுகாப்புப் படையின் 50 கம்பெனிகளை 10.03.2026 அன்று அனுப்பியுள்ளது. தற்போது, மத்திய உள்துறை அமைச்சகம் கூடுதலாக மத்திய ஆயுத பாதுகாப்புப் படையின் 250 கம்பெனிகளை பாதுகாப்பான, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்காக நியமித்துள்ளது. அந்த கம்பெனிகள் 06.04.2026 மற்றும் 13.04.2026 அன்று தமிழ்நாட்டிற்கு வழங்கப்படவுள்ளது.

3. அனைத்து மாவட்ட தேர்தல் அலுவலர் / தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு வாக்குச்சாவடி தலைமை அலுவலர் கைபேசி செயலி பயன்படுத்துதல் பற்றிய பயிற்சி இந்திய தேர்தல் ஆணையம் மூலம் 19.03.2026 அன்று காணொலி வழியாக வழங்கப்பட்டது. இந்த கைபேசி செயலியின் மூலம், வாக்குப்பதிவு நாளில் ஒவ்வொரு 2 மணி நேரத்துக்கும் வாக்குப்பதிவு நிலவரங்களை வாக்குச்சாவடி தலைமை அலுவலர் பதிவு செய்வதற்கான வசதிகள் உள்ளது.

4. தேர்தல் நாளன்றும் மற்றும் தேர்தல் நாளுக்கு ஒரு நாள் முன்னதாகவும், எந்தவொரு அரசியல் கட்சியோ, வேட்பாளரோ அல்லது வேறு எந்த அமைப்போ அல்லது நபரோ, மாநில/மாவட்ட அளவிலான ஊடகச் சான்றளிப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவிடம் (MCMC) உள்ளடக்கத்தை முன் சான்றொப்பம் (Precertified) பெறாமல், அச்சு ஊடகங்களில் (Print Media) எந்தவொரு அரசியல் விளம்பரத்தையும் வெளியிடக்கூடாது என்று ஆணையம் உத்தரவிட்டுள்ளது. மாநிலத்தில் புழக்கத்தில் உள்ள அச்சு ஊடகங்களில் வெளியிடப்படும் அரசியல் விளம்பரங்களுக்கு, கீழே கொடுக்கப்பட்டுள்ள நாட்களுக்கு இந்த நடைமுறை பொருந்தும்:

**தேர்தல் நாள் : 23.04.2026**

**தடை செய்யப்பட்ட நாட்கள் (தேர்தல் நாள் மற்றும் தேர்தலுக்கு முந்தைய நாள்)**

**22.04.2026 & 23.04.2026**

இவ்வாறு தலைமைத் தேர்தல் அதிகாரி தெரிவித்துள்ளார்.